சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் கடந்த 2025ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பிரதிவாதி ஆலயத்தில் தக்கராக நியமனம் செய்யப்பட்டு பணி செய்து வருகிறேன். பிரதிவாதி ஆலயத்தின் சொத்துக்களை குறித்து பதிவு செய்து வைத்துள்ள சொத்து பதிவேடு எங்கள் அலுவலகத்தில் உண்டு என்றால் சரிதான். ஒவ்வொரு சொத்துக்களில் இருந்து கிடைக்க கூடிய வருமானத்தை வரவு செலவு பதிவேடுகளில் வரிசையாக எழுதிபேணி பாதுகாத்து வருவோம் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 51 தென்னை மரங்கள் உள்ளன என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களில் உள்ள தென்னை மரங்களில் இருந்து கிடைக்ககூடிய வருமானங்களை நாங்கள் பேணி வரும் வரவு செலவு பதிவேட்டில் குறிப்பிட்டு வரவு செய்துள்ளோமா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் உள்ள தென்னை மரங்களில் உள்ள தேங்காய் மகசூலை யார் எடுத்து வருகிறார்கள் என்றால் வாதி தான் எடுத்து வருகிறார். தென்னை மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வரப்படுகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நான் நேரில் பார்த்துள்ளேன். அப்பகுதி ஈரபதம் கொண்ட நிலம் என்பதால் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய அவசியமில்லை. வழக்கு சொத்தில் யார் களை நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் களை இல்லை. வா.சா.ஆ 3 தான் தபசில் சொத்தா என்றால் தெரியவில்லை. நான் பார்த்தது போல் இல்லை. எனது வழக்கறிஞர் மூலமாக வாதியை குறுக்கு விசாரணை செய்த போது வாதி தபசில் சொத்தில் களைபறிப்பது போல் பாசாங்கு செய்வதாக புகைப்படம் எடுத்து தாக்கல் செய்துள்ளார் என குறுக்குவிசாரணையில் குறிப்பிட்டு கூறி குறுக்குவிசாரணை செய்துள்ள நிலையில் வா.சா.ஆ 3 புகைப்படங்கள் வழக்கு சொத்து சார்ந்தவை என ஒப்புக் கொண்டு விட்டு தற்போது அது பற்றி தெரியாது என பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 பிராது 2 லக்க ஆவணங்கள்

பிரதிவாதி கோவில் பூசாரியினால் வாதிக்கு வழங்கப்பட்ட பாட்ட தொகை வரவு ரசீதுகள் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணம் பிரதிவாதி ஆலயத்திற்குரிய சொத்திற்கான பட்டா என்றால் சரிதான். வழக்கு சொத்து வாதியின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றும், அதனை நான் தற்போது எனது குறுக்குவிசாரணை வாக்குமூலத்தில் வாதி தான் தேங்காய் மகசூல் எடுப்பதாக கூறி ஒப்புக்கொண்டுள்ளேன் என்றும், இந்நிலையில் வாதி கேட்டுள்ள தீர்வுகள் வாதிக்கு பிராதுபடி கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்)K.சுதா ராணி,<br>
கூடுதல் சார்பு நீதிபதி,<br>
தென்காசி.